**பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்,** *சென்னை 06*

**முன்னிலை : முனைவர்.** S. **நாகராஜ முருகன்**

ந.க.எண்.065 /ஆ2/2024 நாள்: 18.07.2024

-----

பொருள் பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை-06- **"புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2024-25** நிதியாண்டில் செயல்படுத்துதல் - திட்ட உட்கூறு வாரியாக செலவினத் தலைப்புகளின் கீழ் அனைத்து மாவட்டங்களுக்கு முதல் தவணையாக செலவின வரையறை நிர்ணயம் செய்து ஆணையிடுதல்.

பார்வை: 1 அரசாணை (நிலை) எண்45 பள்ளிக் கல்வித் (எம்எஸ்) துறை நாள்.24.02.2021

2 PAB Meeting GoI Minutes of Meeting F.No.1-1/2022-AE- 4 /MoE/DOSEAL/ Dt.09.04.2024

3 இவ்வியக்கக இதே எண்ணிட்டி செயல்முறைகள் கடிதம் நாள்.09.07.2024

4 ஒன்றிய அரசுக் கடித எண். F.No.20-22/2022-AE.1 நாள்.19.06.2024

5 அரசாணை (நிலை) எண்.159 பள்ளிக் கல்வி (MS) துறை நாள். 09.07.2024.

..............

**ஆணை**

தமிழ்நாட்டில் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பை அடிப்படையாக கொண்டு 15 வயதிற்கு மேற்பட்ட முற்றிலும் எழுதப்படிக்கத் தெரியாதோருக்கு அடிப்படை எழுத்தறிவு எண்ணறிவு கல்வியை வழங்கிடும் நோக்கில் வயது புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022-27 அனைத்து மவாட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

பார்வை -3-இல் காண் இவ்வியக்ககச் செயல்முறைகளின்படி, **2024-25-ஆம் ஆண்டில்** புதிய பாரத எழுத்தறிவுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு 15 வயதிற்கு மேற்பட்ட எழுதப்படிக்கத் தெரியாத 5,33,100 கற்போருக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்வியை வழங்கிடும் வகையில், இரண்டு கட்டங்களாக செயல்படுத்த திட்டமிடப்பட்டு, முதல் கட்டமாக 15.07.2024 அன்று முதல் கற்போர் எழுத்தறிவு மையங்கள் தொடங்கப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பார்வை 4-ல் மற்றும் 5-ன்படி 2024-25-ஆம் நிதியாண்டிற்குரிய, இத்திட்டம் சார்ந்து 50% முதல் தவணை நிதி மாநில அரசால் இவ்வியக்ககத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிதியில், பின்வரும் தலைப்புகளில் செலவினம் மேற்கொள்ள ஏதுவாக அனைத்து மாவட்டங்களுக்கும் இணைப்பில் கண்டுள்ளவாறு 2024 - 25 ஆம் ஆண்டு முதல் தவணையாக செலவின வரையறை நிர்ணயம் செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது. இச்செலவின வரையறையின்படி அந்தந்த தலைப்புகளுக்கெதிரே குறிப்பிட்டுள்ள நிதி ஒதுக்கீடு மற்றும் செயல்பாடுகளின் அடிப்படையில் திட்ட விதிகளைப் பின்பற்றி செலவினங்களை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | உட்கூறுகளின் எண் / தலைப்பு | அலகுத் தொகை (Unit cost) | மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள் | மாவட்டங்களுக்கு விடுவிக்கப் பட்டுள்ள மொத்த தொகை | வேண்டிய நிலை |
|---|---|---|---|---|---|
| | Critical Life Skills and Foundational Literacy and Numeracy | | | | |
| 1 | 1.1 Survey of Learners and VTS and Data Base: | Rs.5/- per Learners (ஒரு கற்போருக்கு ரூ.5/- வீதம்) | தங்கள் மாவட்டம் / ஒன்றியம் அளவிலான திட்ட இலக்கிற்கேற்ப கல்லாதோரைக் கண்டறிந்து, அவர்களின் விவரங்களை EMIS கைபேசி செயலியில் பதிவேற்றம் செய்தும் உரிய படிவத்தில் பூர்த்தி செய்தும் அந்தந்த மையங்கள் அளவில் தயார் நிலையில் வைத்திருக்கும் செயல்பாடுகளுக்கு இச்செலவினம் மேற்கொள்ள வேண்டும். | ரூ.26,65,500/- | கற்போர் எண்ணிக்கையின் படி, கணக்கெடுப்புப் பணியை மேற்கொண்ட தன்னார்வலர் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையின் படி வட்டார வள மையங்களுக்கு செலவின வரையறை நிர்ணயம் செய்ய வேண்டும். |
| 2 | 1.2 Teaching learning Expenses including TLM | Rs.40/- per Learners (ஒரு கற்போருக்கு ரூ.40/- வீதம்) | முதல் மற்றும் இரண்டாம் கட்டத்திற்கான அனைத்து கற்போர்களுக்கு கோடிட்ட நோட்டுப் புத்தகம், பென்சில், சிலேட்டு, எழுது குச்சி ஆகிய கற்றல் துணைப் பொருட்களை உரிய கொள்முதல் விதிகளைப் பின்பற்றி கொள்முதல் செய்து கற்போர் மையங்களுக்கு வழங்கிட மொத்த தொகையும் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. | ரூ.2,13,24,000/- | தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களுக்கும் தங்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கற்போர் இலக்கு எண்ணிக்கையின் படி, அனைத்து வட்டார வளமையங்களுக்கும் செலவின வரையறை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். |
| 3 | 1.3 Training of Literacy Functionaries | Rs.7.5/-per learner (ஒரு கற்போருக்கு ரூ.7.5/- வீதம்) | கற்போர் எழுத்தறிவு மைய தன்னார்வலர்களுக்கு பாடப் பொருள் (Content) சார்ந்து அனைத்து வட்டார அளவில் நடத்தப்படும் பயிற்சிக்கு செலவினங்கள் இந்நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். | ரூ.39,98,258/- | ஒன்றிய அளவிலான பயிற்சிக்கு சார்ந்த வட்டார வள மையங்களுக்கு செலவின வரையறை நிர்ணயிக்கப்பட வேண்டும். |
| 4 | MME & Administrative Expense | District / Block MME | முதல்கட்டமாக விடுவிக்கப்படும் நிதியிலிருந்து புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் சார்ந்த மாவட்ட அளவிலான கூட்டங்கள், திட்டச் செயல்பாடுகள் சார்ந்த ஆவணங்கள் தயாரித்தல், திட்டம் சார்ந்த நிருவாக செலவினங்களுக்கு இந்நிதியைப் பயன்படுத்த வேண்டும். | ரூ.10,55,544/- | மாவட்டத் திட்ட அலுவலகத்திற்கு இணைப்பில் உள்ளவாறு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. |
| | | | மொத்த செலவு வரையறை | ரூ.2,90,43,302/- | |

**ரூ.2,90,43,302/-(ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூறு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து முந்நூற்று இரண்டு மட்டும்)**

அனைத்து மாவட்டங்களுக்கான தலைப்பு உட்கூறுகள் வாரியான நிதி விடுவிப்பு நிர்ணய விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

**அ. திட்ட செலவினங்களுக்கான கோப்புகள் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல் :**

- திட்ட உட்கூறுகள் செலவின வாரியாக கோப்புகள் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல் வேண்டும்.
- மாவட்டம் மற்றும் ஒன்றியங்கள் அளவில் திட்டம் சார்ந்த புள்ளி விவரங்கள் , திட்ட உட்கூறுவாரியாக செலவினங்கள், சார்ந்த கோப்புகள், உரிய பற்றுச் சீட்டுகள் / இரசீதுகள் (Vouchers and Bills), ஆவணங்கள், ரொக்கப் புத்தகப் பதிவேடுகள்(Cash Book in Double entry system), வங்கிக் கணக்குப் புத்தகம் (Pass Book) மாத வாரியான வங்கி வரவு மற்றும் செலவின அறிக்கை (Bank Statement), மாதந்திர ஒத்திசைவு (Reconciliation )செய்து அதற்கான அறிக்கை, இருப்பு பதிவேடு ஆகியனவற்றை முறையாகப் பராமரிக்க வேண்டும்.

**ஆ. Public Financial Management System (PFMS) :**

- இத்திட்டம் சார்ந்து நிதி நிருவாக செயல்பாடுகள் அனைத்தும் கடந்த நிதியாண்டில் மேற்கொண்டவாறு CANARA BANK CSS PORTAL வாயிலாக மேற்கொள்ளும் வகையில் திட்ட செயல்பாடுகள் உட்கூறுவாரியாக செலவினங்கள் சார்ந்த கோப்புகள், சுற்றறிக்கைகள், கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்தையும் மாவட்ட மற்றும் வட்டார அலுவலகங்களில் உரிய வழிகளில் பராமரித்திடல் வேண்டும்.

**இ. திட்டத் தலைப்புகளில் செலவினம் வரையறை :**

- புதிய பாரத எழுத்தறிவுத் திட்ட உட்கூறுகளின் கீழ் விடுவிக்கப்படும் / அனுமதிக்கப்பட்ட நிதிக்கு மேல் செலவினங்கள் மேற்கொள்ளக் கூடாது.
- **திட்ட உட்கூறுக்ளுக்குள் விடுவிக்கப்படும் / அனுமதிக்கப்பட்ட நிதியை எக்காரணம் கொண்டும் வேறு உட்கூறுகளுக்குள் மாற்றி செலவினங்கள் மேற்கொள்ளக் கூடாது.**
- உட்கூறுகளின் கீழ் மேற்கொள்ளப்படும் செலவின விவரங்கள் அனைத்தும் அந்தந்த உட்கூறின் கீழ் மட்டுமே பராமரிக்கப்பட வேண்டும் . குறிப்பாக இச் செலவினகளை CANARA BANK CSS PORTAL –ல் உள்ள திட்டஉட்கூறு தலைப்புகளின்படி பராமரிக்கப்பட வேண்டும்.
- திட்டம் சார் நிதி வரவு செலவினங்களில் காசோலை முறை கிடையாது. பயனாளர்கள் / விற்பனையாளர்களுக்கு நேரடியாக பணமாகவோ அல்லது காசோலை வாயிலாகவோ தொகை வழங்கக் கூடாது. ECS வாயிலாக மட்டுமே பயனாளர்கள் / விற்பனையாளர்கள் (Vendors) சார்ந்த பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- பயனாளர்கள் / விற்பனையாளர்கள் Vendor–ஆக பதிவு மேற்கொள்ளும் போது அவர்களது வங்கி கணக்கு நடப்பில் உள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

ஈ. பயன்பாட்டுச் சான்றிதழ்:

➢ மேற்கண்ட திட்ட செயல்பாடுகளை 30.08.2024–க்குள் தலைப்பு வாரியாக செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு அச்செலவினங்களுக்கான பயன்பாட்டுச் சான்றிதழில் (Utilization certificate) முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பமிட்டு இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

எனவே, நடப்பு 2024 – 25 ஆம் நிதியாண்டில் புதிய பாரத எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்டவாறு உட்கூறுகளுக்கு முதற்கட்டமாக விடுவிக்கப்பட்டுள்ள திட்ட நிதியைக் கொண்டு உரிய திட்ட விதிமுறைகளைத் தவறாது பின்பற்றி, எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் திட்ட செயல்பாடுகளை சிறப்பாகச் செயல்படுத்திட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு –
மாவட்டங்களுக்கு வரையறை செய்து நிர்ணயிக்கப்பட்ட
தலைப்பு / உட்கூறுகள் வாரியான நிதி விவரம்

இயக்குநர்

19/7/24

பெறுநர்
1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. உதவிக் கணக்கு அலுவலர் (தக்க நடவடிக்கைக்காக).

Rc.No. 65/2024/B1/Dated: 07.2024 **DIRECTORATE OF NON-FORMAL & ADULT EDUCATION**

**Puthiya Bharatha Ezhutharivu Thittam 2024-25 (NILP 22-27)**

**FIRST INSTALLMENT OF FUND RELEASE for the FY 2024-25**

| Serial No | District Name | No. of Learners | Survey of Learners and VTs and Data Base @ Rs.5/- | Teaching Learning Expenses including TLM @ Rs.40/- | Training of Literacy Functionaries @ Rs.7.5/- | MME | Total |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Ariyalur | 2048 | 10240 | 81920 | 15360 | 4055 | 111575 |
| 2 | Chengulpet | 20355 | 101775 | 814200 | 152663 | 40303 | 1108941 |
| 3 | Chennai | 21560 | 107800 | 862400 | 161700 | 42689 | 1174589 |
| 4 | Coimbatore | 27250 | 136250 | 1090000 | 204375 | 53955 | 1484580 |
| 5 | Cuddalore | 27291 | 136455 | 1091640 | 204683 | 54036 | 1486814 |
| 6 | Dharmapuri | 3910 | 19550 | 156400 | 29325 | 7742 | 213017 |
| 7 | Dindigul | 25065 | 125325 | 1002600 | 187988 | 49629 | 1365542 |
| 8 | Erode | 12574 | 62870 | 502960 | 94305 | 24897 | 685032 |
| 9 | Kallakurichi | 4609 | 23045 | 184360 | 34568 | 9126 | 251099 |
| 10 | Kancheepuram | 11310 | 56550 | 452400 | 84825 | 22394 | 616169 |
| 11 | Kanniyakumari | 7336 | 36680 | 293440 | 55020 | 14526 | 399666 |
| 12 | Karur | 12746 | 63730 | 509840 | 95595 | 25237 | 694402 |
| 13 | Krishnagiri | 8664 | 43320 | 346560 | 64980 | 17155 | 472015 |
| 14 | Madurai | 24250 | 121250 | 970000 | 181875 | 48015 | 1321140 |
| 15 | Mayilauduthurai | 6100 | 30500 | 244000 | 45750 | 12078 | 332328 |
| 16 | Nagapattinam | 7322 | 36610 | 292880 | 54915 | 14498 | 398903 |
| 17 | Namakkal | 21699 | 108495 | 867960 | 162743 | 42964 | 1182162 |
| 18 | Perambalur | 1561 | 7805 | 62440 | 11708 | 3091 | 85044 |
| 19 | Pudukkottai | 17750 | 88750 | 710000 | 133125 | 35145 | 967020 |
| 20 | Ramanathapuram | 8623 | 43115 | 344920 | 64673 | 17074 | 469782 |
| 21 | Ranipet | 15125 | 75625 | 605000 | 113438 | 29948 | 824011 |
| 22 | Salem | 22516 | 112580 | 900640 | 168870 | 44582 | 1226672 |
| 23 | Sivaganga | 13026 | 65130 | 521040 | 97695 | 25792 | 709657 |
| 24 | Thanjavur | 20053 | 100265 | 802120 | 150398 | 39705 | 1092488 |
| 25 | The Nilgiris | 5324 | 26620 | 212960 | 39930 | 10542 | 290052 |
| 26 | Theni | 13655 | 68275 | 546200 | 102413 | 27037 | 743925 |
| 27 | Thenkasi | 13016 | 65080 | 520640 | 97620 | 25772 | 709112 |
| 28 | Thirupattur | 11346 | 56730 | 453840 | 85095 | 22465 | 618130 |
| 29 | Thiruvallur | 28220 | 141100 | 1128800 | 211650 | 55876 | 1537426 |
| 30 | Thiruvarur | 10287 | 51435 | 411480 | 77153 | 20369 | 560437 |
| 31 | Thoothukkudi | 11567 | 57835 | 462680 | 86753 | 22903 | 630171 |
| 32 | Tiruchirappalli | 22050 | 110250 | 882000 | 165375 | 43659 | 1201284 |
| 33 | Tirunelveli | 14318 | 71590 | 572720 | 107385 | 28350 | 780045 |
| 34 | Tiruppur | 18797 | 93985 | 751880 | 140978 | 37216 | 1024059 |
| 35 | Tiruvannamalai | 5795 | 28975 | 231800 | 43463 | 11474 | 315712 |
| 36 | Vellore | 15124 | 75620 | 604960 | 113430 | 29946 | 823956 |
| 37 | Villupuram | 8069 | 40345 | 322760 | 60518 | 15977 | 439600 |
| 38 | Virudhunagar | 12789 | 63945 | 511560 | 95918 | 25322 | 696745 |
| | **Total** | **533100** | **2665500** | **21324000** | **3998258** | **1055544** | **29043302** |

DIRECTOR

DIRECTORATE OF NON-FORMAL & ADULT EDUCATION

CHENNAI